Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 11 (06.12.2003) சனிக்கிழமை இதழ் :67





'எரிக் கணேஷ்'

பல் மூக்குக் கண்ணாடி அகம்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சாங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கணேஷ்' (சி-1802)


## ஜனாதிபதி - ஜே.வி.பி. சந்திப்பு மீளவும் திங்களன்று ஒத்திவைப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கூட்டணி ஒன்றை உருவாக்குவது தொடர்பாக நடைபெறவிருந்த சந்திப்பு நாளைமறுதினத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது -

நாளை மறுதினம் மாலை இருதரப்பின ருக்குமிடையே சந்திப்பு நடைபெறும் ஆனால் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு ஏன் ஒத்திவைக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொமன்வெல்த் செயலர் பதவிக்கு கதிர்காமருக்கு ஆதரவளிப்பதா?

### குழம்பிய நிலையில் இந்திய அரசாங்கம்

(புதுடெல்கி)

கொமன்வெல்த் செயலாளர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமர் போட்டியிடுவதையிட்டு, அவருக்கான ஆதரவை வழங்குவதா? இல் லையா என்பதில் இந்திய அரசாங்கம் இரு தலைக்கொள்ளி நிலையில் உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட இந் திய வெளியுறவு அமைச்சின் செயலர் சன்ஸ் காவ் - புதுடெல்கி இது தொடர்பில் குழப்ப மான நிலையில் உள்ளது. கொமன்வெல்த் தில் அங்கம் வகிக்கும் உறுப்புநாடுகள் சகல வற்றின் அங்கத்தவர்களும், தற்போதைய செய லாளரான டொன் மக்கினனையே ஆதரிக்கி ன்றனர். அவரே அடுத்த செயலாளராகவும் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இலங்கை எமது அயல்நாடு அத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலைகள் அரசாங்கத்தால் அதிகரிப்பு!

(கொழும்பு)

பெற்றோல் தவிர்ந்த ஏனைய எரிபொருட்களின் விலைகள் அதிகரிககப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவில் இருந்து டீசல் ஒரு ரூபாவாலும், மண்ணெண்ணெய் இரண்டு ரூபா வாலும் ஏனைய எரிபொருள் வகைகள் 60 சதத்தாலும் உயர்த்தப்பட்டிருப்பதாக பெற்றோ லியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், மாதா மாதம் செய்து கொள்ளப்படுகின்ற ஒரு திருத்தம் தொடர்பா னதாக பெற்றோலியக்கூட்டுத்தாபனம் இந்தத் தகவலை தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி - பிரதமர் நேற்று மாலை சந்திப்பு;

# 15 ஆம் திகதிக்கு முன் பிரச்சினைக்குத் தீர்வு!

## ஒரு மணிநேரம் இடம்பெற்ற பேச்சில் முடிவு



(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை 4.45 மணிக்கு இடம்பெற்றது.**

**சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி களுக்குத் தீர்வுகாண்பதற்காக நடைபெற்று வரும் பேச் சுக்களை இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் முடி வுக்குக் கொண்டு வருவதென தீர்மானிக்கப்பட்டது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்காக, மலிக் சமரவிக்கிரம தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு, இருவருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தக் குழு இதுவரை ஜனாதிபதிக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)



## கூட்டணிக்கு எதிர்ப்பு!

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகள் எதிர்ப்புத் தெரி வித்துள்ளன. நேற்று ஜனாதிபதி தலைமை யில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்ன ணியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் அந்த கட்சிகள் இரண்டும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங் கம் வகிக்கும் லங்கா சமசமாஜக்கட்சி, கம் யூனிஸ்ட்கட்சி ஆகிய இரண்டுமே ஜே.வி.பியு டன் கூட்டணி அமைப்பதற்கு முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு கட்சிகளும் பத்துத் தினங்களில் தமது முடிவை வெளியிடும் எனத் தெரிய வருகிறது. (01)

### தென் தமிழீழத்தின்

## முதல் கரும்புலி மேஜர் ரங்கனின் 8 ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு!

(மட்டக்களப்பு)

தென்தமிழீழத்தில் முதல் கரும்புலித் தாக்குதல் நடத்தி வீரகாவியமான கரும்புலி மேஜர் ரங்கனின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று மட்டக்களப்பில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

கரும்புலி மேஜர் ரங்கன் வீரகாவியமான மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலய முன்றிலில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரினை மட்டக்களப்பு பீடாதிபதி எஸ்.பாக்கியராஜ் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியை விடுதலைப் புலிகளின் தள பதிபதிகளில் ஒருவரான ராம் ஏற்றிவைத்தார்.

நினைவுரையை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌ சல்யன் , தளபதி ராம், தேனுராம், கார்த்திக் ஆகியோர் நிகழ்த்தினர்.

## அவுஸ்திரேலிய பிரதமர் சென்ற விமானம் திடீரென கட்டுநாயக்கவில் தரையிறக்கம்!

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவாட பயணம்செய்த விமானம் எரிபொருள் நிரப்பு வதற்காக நேற்றுமுன்தினம் காலை திடீரென கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தரை இறங்கியது.

நைஜீரியாவில் நடைபெறவுள்ள கொமன் வெல்த் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள சென்றுகொண்டிருந்த வேளையில், இவர் சென்ற விமானத்திற்கு எரிபொருள் நிரப்பவேண்டியி ருந்ததால் திடீரென தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்ட கட்டு நாயக்க விமானநிலைய ஊழியர்கள்-திடீரென தரையிறங்கிய விமானத்தால் நாம் ஆச்சரிய மடைந்தோம். அத்துடன் விமானத்திற்குள் யார் இருப்பது என்பது கூட எமக்கு தெரியாது. அவுஸ்ரேலிய பிரதமர் காலை உணவையும் விமானநிலையத்தில் எடுத்தாகவும் தெரிவித் தனர்.

## ஜயவர்த்தனபுர துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்!

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உப வேந்தர் எபிடவத்தவை பதவியிலிருந்து நீக் குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்தத் தகவலை ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி டி..எஸ்.எபிடவத்தை யின் தன்னிசசையான செயற்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்கலைக்கழகத்தின் விரிவுரை யாளர் கலாநிதி என்.எஸ்.அமரதாஸ கடந்த செவ்வாய் முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்ததை நடத்திவருகிறார்.

மாணவர்கள் வகுப்பறையை பகிஷ்கரித்து உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதனையடுத்து துணைவேந் தரை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதி பதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென தொடர்ந்து கோரிக்கை விடப்பட்டு வருவதையடுத்து இந்தத் திடீர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கண்ணிவெடி அகற்றிய பிரதேசம் வவுனியாவில் நேற்று கையளிப்பு!

(வவுனியா)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் கண்ணி வெடியகற்றும் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த, இந்திய கண்ணிவெடியகற்றும் பிரிவின ரான சர்வேத்திரா குழுவினர் தம்மால் கண்ணி வெடியகற்றப்பட்ட பகுதிகளை நேற்று பொது மக்களிடம் கையளித்தனர்.

நேற்றுக்காலை பத்து மணிக்கு ஓமந்தை மத்திய கல்லூரியில் நடந்த இந்த கையளிப்பு நிகழ்வில், சர்வேத்திரா கண்ணிவெடியகற்றும் குழுவின் தலைமையதிகாரி - பிரிகேடியர் எஸ்.எஸ்.பரார், வவுனியா மாவட்டத் இராணுவ அதிகாரியான கேணல் மோஷத், வவுனியா அரச அதிபர் கே.கணேஷ், பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மற்றும் எம்.எம்.ஐ. நிறுவனத் தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய கண்ணிவெடியகற் றும் குழுவின் தலைவரான எஸ்.எஸ்.பரார் - நாம் ஓமந்தையின் வடமேற்கின் மக்கள் குடி யிருப்புக்களுக்கு உட்பட்ட வயல் நிலங்கள், தோட்டக் காணிகள் என்பவற்றில் இருந்த மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றி யுள்ளோம். எதிர்வரும் 10 ஆம் திகதி நாடு திரும்பவுள்ள நாம், ஜனவரி 15 ஆம் திகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 0114512666 0112360290 0112360291

email . jaffna @ expoavi . com. (சி -1845)

எக்ஸ்போஎயார் வான் வெளியில் உங்கள் தோழன்...




# நத்தார் புதுவருட



## அசத்தலான தள்ளுபடி

- ☆ நத்தார் – புதுவருட விலைக் கழிவுகள்
- ☆ நத்தார் – புதுவருட சலுகைகள்
- ☆ ஒன்றை வாங்கி மற்றொன்று இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
- ☆ நத்தார் – புதுவருடத்தில் பொன்னான வாய்ப்புக்களைத் தவறவிடாதீர்கள்

**விரையுங்கள்** இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

நியாய விலையில்
தரமான பொருட்கள் ஒரே கூரையின்கீழ்!
யாழ். நகரில் 1 ஆவதாக முற்றிலும்
நவீனமயப்படுத்தப்பட்டது

பண்டிகை, தினசரி தேவைகளுக்கு
எங்களிடமிருந்து
பெற்றுக்கொள்ளுங்கள்

- ✪ நத்தார் பண்டிகைப் பொருட்கள்
- ✪ இறைச்சி வகைகள்
- ✪ வெளிநாட்டு பழவகைகள்
- ✪ அன்பளிப்புப் பொருட்கள்
- ✪ ஐஸ்கிறீம் வகைகள்
- ✪ பழப்பானங்கள்
- ✪ சிகை அலங்காரப் பொருட்கள்
- ✪ மளிகை பொருட்கள்
- ✪ வீட்டுப்பாவனை பொருட்கள்
- ✪ தங்க நகைகள்
- ✪ மருந்து வகைகள் *மேலும் பல ....*



**Annai Nagaa Food City**

175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: (021) 2225515, (021) 2225223

(சி-1867)

# தென்னாபிரிக்க நாடாளுமன்றத்தில் புலிகளின் அரசியல் குழுவினருக்கு பெரும் வரவேற்பு!

தென்னாபிரிக்க குவாசுலு நட்டார் மாகாண நாடாளுமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம்செய்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவின் பிரதிநிதிகளுக்கு, பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க நாடாளுமன்றத்துக்கு விஜயம்செய்த விடுதலைப் புலிக்ளின் அரசியல் விவகாரக்குழுவின் பிரதிநிதிகளை, அந்த மாகாண அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து, தமிழ்மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததாகத் தெரியவந்துள்ளது.

அத்துடன், அந்த நாடாளுமன்றத்தில், தமிழ்மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக, அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 29 ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவை - ஜோகான்னஸ்பேர்க் விமானநிலையத்தில் வைத்து, ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த இமானுவேல் வரவேற்றார்.

இவர்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸைச் சேர்ந்த உதவிப் பிரதமரின் ஆலோசகரான இப்ராஹிமைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதோடு, பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து தென்னாபிரிக்க அனுபவங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

டேபன் நகருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த இவர்கள் - அந்த நகரின் மேயர், துணை மேயர் மற்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தச் சந்திப்புக்களில் எல்லாம் விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் நியாயத்தன்மையை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறியிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், தென்னாபிரிக்காவில் வாழும் தமிழ்பேசும் மக்களையும் நேற்றுமுன்தினம் சந்தித்து, அம்மக்களின் வாழ்க்கை முறைகள் குறித்து அறிந்துகொண்ட இவர்கள், கேப்டவுனுக்கும் விஜயம் செய்தனர்.

• விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழு - அந்த நாட்டின் அமைப்பு முறைகள் குறித்து ஆராய்ந்து வருவதுடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களையும் பார்வையிட்டு வருகின்றனர்.

# தப்பியோடிய இராணுவச் சிப்பாய் மின்னேரியாவில் வைத்து கைது!

கொடிகாமம் பகுதியில் - பொதுமக்களிடம் ஆயுதத்தையும், வெடிபொருட்களையும் விற்றுவிட்டுத் தலைமறைவாகிய இராணுவச்சிப்பாய் ஒருவர், மின்னேரியாவில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கொடிகாமத்திலுள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த கெ.ஏ.லக்ஷ்மன் ரணசிங்க என்பவரே தலைமறைவாகியவராவார்.

, மின்னேரியாவிலுள்ள இராணுவத் தலைமை அலுவலகத்திற்கு அண்மையில் வியாபாரம் செய்துகொண்டிருந்தவேளை, இவர் இராணுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொடிகாமம் வைரவர் வீதியிலுள்ள பொதுமக்கள் சிலருக்கு ரி56 ரகத் துப்பாக்கி மற்றும் ரவைகளை விற்றுவிட்டு, கடந்த ஓகஸ்ட் மாதம் இவர் தலைமறைவாகியுள்ளார்.

அநுராதபுரம் சென்ற வாகனம் ஒன்றில், கண்டி வீதியூடாக இவர் தப்பிச்சென்றதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட இவரை, எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் - பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை - சிப்பாயிடம் துப்பாக்கியையும், ரவைகளையும் கொள்வனவுசெய்த பொதுமக்களையும் கைதுசெய்வதற்கான புலன்விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (202)

# மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பறித்தமைக்கு ஜே.வி.பியே காரணம்!

## ஐ.தே.க. ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சினையும், ஊடகத்துறை, உள்துறை அமைச்சுக்களையும் கையேற்ற செயலுக்கு, ஜே.வி.பி.யினரே காரணமென, ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சசிந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஜே.வி.பியே தற்போதைய அரசியல் நெருக்கடிகள் ஏற்படுவதற்கு காரணம் என்றும், இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குரிய முன்னேற்பாடு ஜே.வி.பியிடம் இல்லை என்றும் சசிந்த கருணாதிலக குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏற்கனவே, விடுதலைப் புலிகளபற்றி விமர்சனம் செய்துவந்த ஜே.வி.பி - ஜனாதிபதி ஊடகத்துறையைக் கைப்பற்றியபின்னர், மாவீரர் தினத்தன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய உரையினை ரூபவாஹினி ஒலிபரப்பு செய்தமை பற்றி விமர்சனம் எதனையும் மேற்கொள்ளவில்லை.

இந்த வகையில், ஜே.வி.பி. எந்த விதமான கொள்கையையும் தனக்கெனக் கடைப்பிடிக்வில்லை என்றும் இவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண கட்டளைத் தளபதி சரத்பொன்சேகா - யாழ்ப்பாணத்தில் இருந்து விலகக்கூடாது என்பது பற்றி, சிஹல உறுமய முன்னர் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி வந்தது. ஆனால், யாழ். மாவட்டத்திலிருந்து சரத்பொன்சேகா விலக்கப்பட்டபோது, எந்தவிதமான கருத்துக்களையும் சிஹல உறுமய வெளியிடவில்லை.

இவ்வாறான நடவடிக்கைகள் அரசியல் சார்பு நடவடிக்கைகளாகவே கருதப்படவேண்டியவை. நாட்டுப்பற்று தொடர்பாக இவர்கள் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கப் போவதில்லை என்றும்,

இதேவேளை, வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகளின் யோசனை - அரசியல் அமைப்புக்கு அப்பாற்பட்டிருப்பதால், அதனைத் தளமாகக்கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்வதில் தாம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை எனவும் ஜே.வி.பி. கூறியுள்ளது.

புலிகளின் வரைபை ஜே.வி.பியோ, ஜனாதிபதியோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும், அவ்வாறு ஏற்றுக்கொண்டால், அது தனிநாட்டுக்கான அங்கீகாரமாக இருக்கும் என்றும் ஜே.வி.பியின நந்தானந்த குணதிலக கூறியுள்ளார். (01)

# இராணுவ-கடற்படை அதிகாரிகளுக்கு மனித உரிமை தொடர்பான கருத்தரங்கு

மனித உரிமை நாளான எதிர்வரும் பத்தாம் திகதி, வவுனியாவிலுள்ள இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரிகளுக்கு மனித உரிமை தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை, மனித உரிமை ஆணைககுழுவினர் நடத்தவுள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழுவைச்சேர்ந்த என்.செல்வக்குமார் மற்றும் எஸ்.ஜி.நிமல்புஞ்சிஹேவா ஆகியோரே இந்தக் கருத்தரங்கினை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

எதிர்வரும் 10 ஆம் திகதி வவுனியாவிலுள்ள 211 ஆவது படைப்பிரிவில நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் - இராணுவத்தரப்பில் 50 அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மறுநாள் வவுனியாவிலுள்ள பூனாவை கடற்படைத்தளத்தில் நடக்கவுள்ள கருத்தரங்கில், கடற்படையைச் சேர்ந்த ஐம்பது அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்குகளில் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)

# கண்ணிவெடிகளை அகற்றும் பணி மட்டக்களப்பில் இன்றுமுதல் ஆரம்பம்

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர்- மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றுமுதல் கண்ணிவெடிகளை அகற்ற ஆரம்பிக்கவுள்ளனர்.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலையடிவெட்டை எனும் கிராமத்தில் 45 உறுப்பினர்களைக்கொண்ட கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தங்கியிருந்து, கண்ணிவெடிகளை இனங்காணும் ஆரம்பக்கட்ட நடவடிக்கையினை ஆரம்பித்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், இதுவரை 37 கிராமங்கள் கண்ணிவெடி அகற்றுவதற்கென இனங்காணப்பட்டுள்ளன.

அண்மையில் வெல்லாவெளிப் பிரதேசத்தில் கண்ணிவெடி வெடித்ததில் - இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்து, மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.






விடுதலைப் புலிகளின் இடைக்கால திட்டவரைபை எதிர்த்து தேசிய பிக்குகள் முன்னணியால் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியில் சில காட்சிகளைப் படத்தில் காணலாம்.

# மேலதிக அரச ஊழியர்களுக்கு விருப்பு அடிப்படையில் ஓய்வு!

## அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசசேவையில் மேலதிகமாக உள்ள ஊழியர்கள் - விருப்பு ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் நிறுத்தப்படுவார்கள் என, அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற அரசசேவைப் பொன்விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது - ஆட்சிப்பீடத்திலிருந்த ஒவ்வொரு அரசுகளும், அரசசேவையைச் சரிவரப்பேணவில்லை. சுயநலமிக்க செயல்களால் அரசசேவையில் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இவற்றைச் சீர்செய்யும் முயற்சியே தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதனடிப்படையில், அரசாங்க சேவையில் மேலதிகமாக உள்ளவர்கள் - சலுகைகளுடன்கூடிய விருப்பு ஓய்வூதியத்திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இளைய சந்ததியினருக்கு வாய்ப்பளிக்கும் ஒரு திட்டமாகவே, விருப்பு ஓய்வூதியத்திட்டம் அறிமுகமாகின்றதே தவிர, அரசசேவையில் உள்ளோரைப் பாதிக்கச் செய்வதற்காக அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புதிய உதவிப் பிரதேச செயலர் நியமனம்

மன்னார் பிரதேச செயலகத்திற்கு உதவிப் பிரதேச செயலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதேச சபையில் செயலாளராகக் கடமையாற்றிய கே.பத்மநாதன் என்பவரே புதிதாக நியமிக்கப்பட்டவராவார்.

இதேவேளை - நானாட்டான் பிரதேச செயலகத்திற்கும் உதவிப் பிரதேச செயலராக கே.சந்திரய்யாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போதே இந்தப் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (201)

# பன்னிரண்டு இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்ட பெண் பொலிஸாரால் கைது!

## கண்டியில் சம்பவம்

(கண்டி)

பன்னிரண்டு இலட்சம் ரூபா கிரடிட்காட் மோசடியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில், பெண்ணொருவர் - பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கண்டியில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பெண்மணி 12 இலட்சம் ரூபா பெறுமதியான கிரடிட்காட்டைப் பயன்படுத்தி, பல வியாபார நிலையங்களில் பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் இந்தப் பெண்மணி இந்த வேலையில் ஈடுபட்டிருந்தார் எனினும், இந்த மாதத்தின் முதலாம் வாரத்திலேயே இவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டியிலுள்ள பல கடைகளில் இந்த கிரடிட்காட்டைப் பயன்படுத்தி, பல பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார், பணமாகவும் பெற்றுள்ளார்.

இவர் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்திய கிரடிட்காட் - உண்மையில் பயன்படுத்தமுடியாத ஒன்றாகும். இது சட்டவிரோதமான கிரடிட்காட் எனவும் தெரியவருகிறது. (01)

### அம்புலன்ஸ் வண்டி விநியோகத்தில்

# வடபகுதி புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து சிவசக்தி ஆனந்தன் சுகாதார அமைச்சுக்கு கடிதம்

புதிதாக வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ள அம்புலன்ஸ் வண்டிகளில், வடபகுதிக்கு இரண்டு மட்டுமே சுகாதார அமைச்சினால் வழங்கப்படவுள்ளதைக் கண்டித்து, வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் - சுகாதார அமைச்சருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு - கிழககிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மொத்தமாக 24 அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், வடபகுதிக்கு இரண்டு மட்டுமே வழங்கப்படவுள்ளன. மிகுதி 22 இல் அம்பாறை மாவட்டத்துக்கு 14, திருகோணமலைக்கு - 3 மட்டக்களப்புக்கு - 4 என்றரீதியில் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக நாம் பிரதமருடன் கதைப்பதற்கு ஏற்கனவே முயற்சித்தபோதும், அது கைகூடவில்லை. யுத்தத்தால் மிகவும் பாதிககப்பட்ட - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வடபகுதியின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள வைத்தியசாலைகளுக்கு, இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் மட்டும் வழங்கப்பட உள்ளமை மிகுந்த கவலையை அளிக்கின்றது.

இங்கிருந்து அநுராதபுரம், கண்டி, கொழும்பு போன்ற மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிக சேவையின் பொருட்டு நோயாளர்கள் கொண்டு செல்லப்படுகின்றார்கள். ஆனால், வழங்கப்படவுள்ள இந்த இரண்டு அன்புலன்ஸ் வண்டிகள்மூலமும், அந்தச் சேவையினைச் செய்யமுடியாது.

தற்போதைய சமாதான காலத்தில் இவ்வாறான பாரபட்சமான நடவடிக்கைகள் விரும்பத்தக்கவை அல்ல. தற்போதைய காலத்திலேயே இவ்வாறு பாரபட்சம் காட்டினால், வேறு எந்தக் காலத்தில் திருப்பதியாகச் செயற்படுவீர்கள். தேவை அதிகமாகவுள்ள இடத்தைவிட்டு, தேவைகுறைந்த இடங்களுக்கு வழங்கப்படுவதைத் தவிர்க்கவேண்டும்.

இவ்வாறு அந்தக் கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## வடமராட்சி தொழிற்பயிற்சி மையத்தில் ஊனமுற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு, கடந்த செவ்வாய்க்கிழமை - யாழ்.திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தில் - ஊனமுற்றோர் கௌரவிப்பு நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் 40 இற்கும் மேற்பட்ட ஊனமுற்றோர் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிகழ்வை முன்னிட்டு, இந்தச் சங்கத்துக்குப் பிரகாஸ்பாலன் தர்மநிதியத்தினரால், வர்ணத்தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று வடமராட்சி தொழிற்பயிற்சி மையத்திலும் ஊனமுற்றோர் கௌரவிப்பு நிகழ்வொன்று இடம்பெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (111)

# பிரித்தானிய பிரதிநிதிகள்குழு நேற்றுமுன்தினம் யாழ்.விஜயம்

பிரித்தானியாவைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தினைச் சேர்ந்த மார்க் இல்டன், பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த கொள்கை முன்னெடுப்பு அதிகாரி நிக்சிலம்பியா மற்றும் சறோ முதலியோரே நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தவர்களாவர்.

இவர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் அரசசார்பற்ற நிறுவ்னங்களின் பிரதிநிதிகள் முதலானோரைச் சந்தித்து, உரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் - தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இதற்குப் பிரித்தானியா - சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுதல்வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வு வளம்பெற அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல்வேண்டும், மக்களுக்கான மீள்குடியேற்ற கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரித்தானிய பிரதிநிதிகளிடம் வேண்டுகோள்களை விடுத்துள்ளார்கள்.

இதேவேளை, இவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம்செய்து, மக்கள் எதிர்கொளளும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றது. (202)

## கைத்தொழில் மதிப்பீட்டாளருக்கு சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடு

இலங்கையில் கைத்தொழில் தொகைமதிப்பீட்டில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு, சம்பளம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அமைப்புக்கள், அவை ஈடுபட்டுவரும் கைத்தொழில் நடவடிக்கைகள், அத்தொழில்களில் ஈடுபடும் பணியாளர்களின் எண்ணிக்கை முதலானவிபரங்களைப் புள்ளிவிபரவியல்திணைக்களம் திரட்டிவருகின்றது.

இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரவியல் திணைகளம் தெரிவித்துள்ளது.



ஆனைக்கோட்டை சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட - சிறுவர்தின விழாவில் நிர்வாக உறுப்பினர் மங்கள விளக்கேற்றுவதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் பிரமுகர்களையம் படத்தில் காணலாம்.

## படை அதிகாரியின் அழைப்பை ஏற்க மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மறுப்பு!

(வடமராட்சி)

வடமராட்சியில் நிலைகொண்டுள்ள 524 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் ரத்னாயக்க சந்திப்பொன்றுக்காக விடுத்த அழைப்பை, வடமராட்சி பிரதேச மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் நிராகரித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை - 524 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தில் இடம்பெறவிருந்த கலந்துரையாடல் ஒன்றிற்கு, படைத் தலைமையகம் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும், படைத்தலைமையகத்தில் கலந்துரையாடலை நடத்தவிருந்தமை மற்றும் இதுவரை அந்தப் படைப்பிரிவினால் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படாமையாலுமே, இந்தச் சந்திப்புக்குத் தாம் செல்லவில்லை என வடமராட்சி மீனவர்சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சியில் பதினைந்துக்கு மேற்பட்ட மீனவர் சங்கங்கள் இயங்கிவருகின்றபோதிலும், எந்தவொரு சங்கத்தின் உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடலுக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (202)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ச.துஷாரா
முகவரி : கந்தரோடை, சுன்னாகம்.

பெயர் : ஜெ.அனுஷிகா
முகவரி : 5 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------------
முகவரி :-----------------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்


## இலங்கை தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்கீட்டுப்பரீட்சை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில்நுட்ப நிறுவன கணக்கீட்டு பரீட்சைகள், முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்ப நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள கணக்கீட்டு பரீட்சைகள் - இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் - தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் - கொழும்பு கணக்கீட்டுப் பரீட்சைகள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்புகொள்ள விரும்புவோர் - பரீட்சைகள் ஆணையகப் பிரதிப் பணிப்பாளர் தி.முத்துவுடன் 2-559669 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு, யாழ். மாவட்ட தொழிநுட்ப நிறுவன இணைப்பாளர் க. கமலேஸ்வரன் கேட்டுள்ளார்.(24)

## புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியால் 18 600 மாணவர்கள் பயன்பெறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் - தமிழர் புனர்வாழ்வுக் கழத்தினரின் ஒழுங்குபடுத்ததில், சமூக பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 18 600 மாணவர்கள் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளின் காரணமாக - தமிழர் தாயகத்தில் பாடசாலை கல்வியை இழந்த 18 600 மாணவர்களையும் - யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் பாடசாலைகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இணைந்துள்ளனர்.

இவற்றைவிட, தொழில்சார் கற்கை நெறியினை வழங்கவேண்டிய பல்கலைக்கழகம், ஆசியாவுக்கான ஜப்பானியக் கிளை, யு.என். எச். சி. ஆர். முதலிய அமைப்புக்கள் உதவி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ம.மதன்ராஜ்
கற்கும் பாடசாலை :- ஊரெழு கணேசா வித்தியாசாலை
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- உதைபந்தாட்டம்.



முழுப்பெயர் :- அ.ஸ்ரீபன் சஞ்சீவன்
கற்கும் பாடசாலை :- பளை மத்திய கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, ஓவியம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- சு.சுவேந்தன்
கற்கும் பாடசாலை :- பளை மத்திய கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- வெ.பிரார்த்தனா
கற்கும் பாடசாலை :- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :- தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- இ.சுதாகரன்
கற்கும் பாடசாலை :- விக்னேஸ்வராக் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :- தொலைக்காட்சி பார்த்தல், பூந்தோட்டம் அமைத்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- ஸ்ரீ.சுயந்தன்
கற்கும் பாடசாலை :- இடைக்குறிச்சி பாடசாலை
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :- நடனம், தொலைக்காட்சி பார்த்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- ப.மதிவதனி
கற்கும் பாடசாலை :- மகாஜனாக் கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப்புத்தகம், பத்திரிகை வாசித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கிறது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
:........................................

............ திகதி ............ ஒப்பம்

............ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............ பெற்றோர் ஒப்பம்



அன்புச் சிறுவர்களே!
கடந்தவாரம் தொலைக்காட்சி பார்த்தலின் நன்மை, தீமைகள் பற்றிக் கேட்டிருந்தேன். தொலைக் காட்சியில் நிகழ்ச்சிகள் பார்க்கும்பொழுது தேர்ந்தெடுத்துப் பாருங்கள். அதேநேரம், நீங்கள் படிக்கும் நேரம், உங்கள் நண்பர்களுடன் விளையாடும் நேரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.
உங்கள் உள்ளத்துக்கும், உடலுக்கும் மகிழ்ச்சியையும், பயிற்சியையும் தருவது விளையாட்டு. எனவே, உங்கள் வயது சிறுவர்களுடன் விளையாடிக் குதூகலமாகப் படியுங்கள். கல்வியும், விளையாட்டும் உங்களுக்குரியவை.

பாசமுடன் -சாரு அக்கா




இங்கே மடிக்கவும்

## My Pet

1. My Pet is a dog.
2. It's name is puppy.
3. It's colour is black and white.
4. It like meat very much.
5. It is a domestic animal.

K. Thanya
Grade - 3,
J/Inuvil Central College.

## இதில் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்



விடை அடுத்தவாரம்



## மழை

வானங் கறுக்குது வானங் கறுக்குது
வானங் கறுக்குதடா
வாடைக்காற்று வந்துவந்து
வளைந்தடிக்குதடா

மாமழை கொட்டுது மாமழை கொட்டுது
மாமழை கொட்டுதடா
மக்க ளெல்லாம் ஓட்டமோடி
மனையை நாடுகிறார்

பட்சி சாலம் பறந்து பறந்து
பக்கம் பாக்குதடா
அச்சங் கொண்டு மாடு கன்றை
அழைத்து நிற்குதடா.

செ.நிருஷியா
தரம் - 1
மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.

## பொது அறிவு

1. உலகில் மிக உயரமாக வளரும் புல் எது?
முங்கில்.
2. கிரிக்கெட் பந்தின் நிறை யாது?
156 கிராம்.
3. உலகில் மிகப்பெரிய கடல் எது?
தென் சீனக்கடல்.
4. உலகில் மிகப்பெரிய எரிமலை எது?
முனைவாக்கோ.
5. உலகின் மிகப்பெரிய சிலை எங்குள்ளது?
அமெரிக்காவில் உள்ள சுதந்திரசிலை.

கு.யுகந்தன், தரம் - 6
உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி.

## பென்சில்



பென்சில் - 1790 ஆம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டில் முதல் முறையாக உருவானது. நிக்கலஸ் ஜாக்கியுஸ் கொண்டே என்பவரே அதனை உருவாக்கினார். காரியம் எனும் ஒருவகை கனியவளத்திலிருந்து தான் பென்சில் செய்யப்படுகிறது. காரியத்துடன் விசேடமாகக் களிமண்ணும் கலக்கப்படுகிறது. பின்னர், இந்தக் கலவை இயந்திரத்தில் இடப்பட்டு சூடாக்கப்படுகிறது.

சூடான கலவை - பிறிதொரு இயந்திரத்தில் இடப்பட்டு, நீளமான குச்சிகளாக வடிவமைக்கப்படுகிறது. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட காரியக்குச்சிகள், சிறிய பாதியாக வெட்டப்பட்ட மர உருளைகளுள் இடப்படுகிறது. பின்னர் இந்த இரண்டு மர உருளைப் பாதிகளும் - இயந்திரங்களினால் பசை பூசி ஒட்டப்படுகிறது.

கலக்கப்படும் மண்ணின் அளவிலேயே பென்சிலின் கடினம் தங்கியுள்ளது. களிமண் கூடுதலாகக் கலக்கப்பட்டால், கடினம் குறைவாக இருக்கும். சித்திரக்கலைஞர்கள் தங்களது படங்களுக்குப் பொருத்தமான பென்சிலைத் தெரிவுசெய்து, அழகிய சித்திரங்களை வரைகின்றனர்.



செ.அனுராஜ்
மேலைப்புலோலி
சைவப்பிரகாச வித்தியாலயம்.

## உங்கள் கைவண்ணம்



ர.ரகுராம்
தரம் - 7
தேவரையாளி இந்துக் கல்லூரி.



சு.சுவேந்தன்
தரம் - 7
பளை மத்திய கல்லூரி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

யானைக்கும் அடி சறுக்கும்
தமிழ் பழமொழி.

## நமது நோக்கு

### ஜனாதிபதியின் வன்னிக்கான தூது...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கான விசேட செய்தியொன்றை, தனது தூதுவர் ஒருவர் மூலமாக ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ளதாக இணையத் தளம் ஒன்று வெளியிட்ட செய்தியானது, ஏனைய வெகுஜன தொடர்பு ஊடகங்கள் ஊடாகவும் வெளிவந்தமையை அடுத்து, மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்களும் எழுவது தவிர்க்கமுடியாத ஒன்றாக உள்ளது.

சில வாரங்களின் முன்னர் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபினை கையளித் ததையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் நாட்டில் இல்லாதவேளையில், சமாதான நகர்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் அவசியமான மூன்று அமைச்சுக்களைத் தன்வசம் எடுத்துக்கொண்டதையடுத்து, சிறிலங்காவின் அரசியலில் ஏற்பட்ட குழப்பநிலையானது, இன்றுவரை நாளொரு வடிவமும் நேரத்திற்கு ஒரு குழப்பமுமாக வளர்ந்துவருகின்ற நிலையில், பல தசாப்தங்களாக தொடர்ந்துவரும் இனப்பிரச்சினைக்குத் திர்வுகாண, கிடைத்த கடைசிச் சந்தர்ப்பமும் நழுவி விடுமோ என்ற சந்தேகம் சர்வதேச மட்டத்திலே உருவாகியுள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது, இம்முறை சமாதான முயற்சியானது - நோர்வேயின் ஏற்பாட்டின் பேரில், சர்வதேச சமூகத்தின் வலுவான ஆதரவுடன் ஆரம்பித்தபோதே, அதனை எந்தவதத்திலும் அங்கீகரிக்காத ஜனாதிபதி, சர்வதேச சமூகத தின் அனுசரனைக்கு முரணாக, பகிரங்கமாக அதனை எதிர்க்கும் திராணியின்றி, அவ்வப்போது தனது அதிருப்தியை அறிக்கைகள் மூலம் வெளியிட்டு வந்ததுடன், மறைமுகமாக இந்த சமாதான முன்னெடுப்புகளைக் குழப்பும் வகையிலான நடவடிக்கைகள் பலவற்றைம் மேற்கொண்டார் என்பது அனைவரும் அறிந்த விடயமே.

கடற்படை, இராணுவம் ஆகியவற்றில் தனது ஆசிர்வாதத்தை அமோகமாகப் பெற்ற தளபதிகளை வைத்துக் கொண்டு, சமாதானத்தைக் குழப்ப அவர் நுட்பமாகப் பின்னிய- விடுதலைப் புலிகளைப் போருக்குத் தள்ளிவிடும் நோக்கிலான சதிவலைகள், புலிகளின் சமாதானம் மீதான பற்றுறுதி, தொலை நோக்குச் சிந்தனை, அளவற்ற பொறுமை, ஆகியவற்றின் காரணமாக பல தடவைகள் - நைந்து, சிதைந்தமையானது ஜனாதிபதிக்குக் கிடைத்த தோல்வியேயாகும்.

ஆனால், அவர் தனது நடவடிக்கைகளில் சோர்வடைந்ததே கிடையாது. இறுதியாக எப்படி அவர் சமாதானத்தைக் குழப்ப மேற்கொண்ட நடவடிக்கைகளில் முக்கியமானவை- நோர்வேயின் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரை மீள அழைத்துக்கொள்ளவேண்டுமென நோர்வே அரசைக் கோரியதையும், அதனையடுத்து ரணில் அமைச்சரவையில் சமாதான முயற்சிகளுக்கு மிகவும் அவசியமான மூன்று அமைச்சுக்களை தனது அதிரடி அரசியல் சதிமூலம் அபகரித்துக் கொண்டதையும் கூறமுடியும்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைவதால் தான், இவ்வாறு நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என அவர் தனது கொள்கைக்கு நியாயம் கற்பித்தாலும்- அதனை எவரும், அவரது கட்சியினரையும், இனவாதக் குழுக்களையும் தவிர எவரும் - அங்கீகரிக்கவில்லை. சர்வதேச சமூகமும் சந்திரிகாவின் நடவடிக்கைகளில் திருப்தி கொள்ளவில்லை. மாறாக ரணில் அரசுடன் ஒரு இணக்கத்தை ஏற்படுத்தி, சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்குமாறு அழுத்தங்களைக் கொடுக்கவே செய்தன.

இதேவேளை, ரணில் தனது அரசின் அதிகார பலமற்ற தன்மையைக் காரணம் காட்டி, சமாதான முயற்சிகளைத் தொடரும் பொறுப்பிலிருந்து விலகுவதாகவும், அதனை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதாகவும் அறிவித்தது - சந்திரிகா எதிர்பார்த்திராத ஒன்றேயாகும். அதனையடுத்து தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க அவர் மேற்கொண்ட தந்திரமும் வெற்றியளிக்கவில்லை. அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில், புரிந்துணர்வை ஏற்படுத்த முயன்ற முயற்சிகளும் ரணிலால் நிராகரிக்கப்பட்டமையால் சந்திரிகா பெரும் குழப்பத்திற்குள்ளானார்.

பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றதும் - தானும் புலிகளுடன் பேசத்தயார் என அறிக்கைவிட்டமையானது, ஜனாதிபதியின் உறுதியற்ற நிலையைத் தெளிவுபடுத்தியது.

அப்போது பி.பி.ஸி இற்கு அளித்த நேர்காணல் ஒன்றில் - அவர் "புலிகளின் தலைவர் பிரபாகரனை தான் என்றுமே ஒரு நல்ல நண்பராகக் கருதவில்லை" ஆனாலும், அவரது அடக்குமுறையன்கீழ் வாழும் இலட்சக்கணக்கான தமிழ்மக்களின் நலனுக்காக அவருடன் பேசவும், செயற்படவும் தயாராக இருப்பதாக- "ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதையாக ஓர் பம்மாத்து" கருத்தொன்றைக் கூறியிருந்தார்.

இது அவரது பொறிக்குள் அவரே விழுந்துவிட்ட நிலையை தெளிவுபடுத்துவதாக அமைந்தது.

சர்வதேசம் சமாதானத்தை வலுயுறுத்துகிறது.

ரணில் தேர்தலுக்குத் தயாராகிறார்.

இந்த நிலையில் சந்திரிகாவால் தேர்தலை எதிர்கொள்வது விஷப்பரீட்சை என்பது அவருக்குத் தெரியும்.

ஆக அவருக்கு இப்போது இருக்கும் மாற்றுத்தீர்வு சமாதானம் மட்டுமே.

அதனை அவரால் எப்படி முன்னெடுப்பது.


மீண்டும் நோர்வேயிடம் சரணடைய அவருக்குக் கூச்சமாகக்கூட இருக்கலாம்.

பங்காளியின் கால்களில் விழுவதைவிட பகையாளியின் கால்களில் விழலாம் என அவர் நினைத்து இருக்கலாம்.

விடுதலைப் புலிகளின் தலைவருடன் - அவர் ஜனாதிபதிக்கு நல்ல நணபராக இல்லாதுவிட்டாலும் - பேசாது சமாதானத்தை மட்டுமல்ல, அவரது அரசியல் எதிர்காலத்தையும் பாதுகாக்க முடியாது என்பதை ஜனாதிபதி உணர்ந்துவிட்டார் போலும்.

சாதகமான பதிலை எதிர்பார்த்து தூதுவரை வன்னிக்கு அனுப்பியது இதனால்தான் போலும்.

## நாடும் நடப்பும்




# படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு தூபிகள் அமைத்து நினைவு கூரப்படும்

## மணலாறு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ்

அநியாயமாகப் படுகொலைசெய்யப்பட்ட மக்களுக்கு, ஆங்காங்கே தூபிகளைக்கட்டி, நினைவுகூரவேண்டும் என்பது தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணக்கருத்து என விடுதலைப் புலிகளின் மணலாறு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ் தெரிவித்தார்.

1984 ஆம் ஆண்டு நெடுங்கேணி - ஒதியமலையில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் நினைவாக, நினைவுத்தூபி திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல இடங்களில் அநியாயமாகக் கொல்லப்பட்ட மக்களின் நினைவுத்தூபிகள் கட்டப்பட்டு, நினைவுகூரப்படவேண்டும். வடக்கு- கிழக்கு தாயகப்பகுதியில், எமது தாயக விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை 85 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அநியாயமாகப் பலதரப்பட்ட சித்திரவதைகள் மத்தியில் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

1987, 1988, 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில், இந்திய இராணுவத்திடமிருந்து தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனை காத்தமண் - இந்தமண். இதனால்தான், முல்லைமண் புனித பூமியாகப் போற்றப்படுகின்றது. முல்லை மாவட்டத்திற்குப் பெரும் வரலாறு உண்டு. வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து மக்களும் - தமிழீழத் தேசியத் தலைவரைக் காத்தமண் - முல்லை மண் என்பதை விளங்கிக்கொள்வார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் நீண்டகாலமாக இந்த மண்ணிலிருந்து போராடினார். மிகப்பெரும் வல்லரசுடன் போராடி, 2000 இற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரைக் கொன்றும், 10 ஆயிரத்துக்கும் அதிகமானோரைக் காயப்படுத்தியும், இந்திய வல்லரசை விரட்டியடித்த சமூகத்தினையும் - தமிழீழ தேசியத் தலைவர் இந்த மண்ணிலிருந்து மேற்கொண்டார். இந்த மண்ணிலிருந்து இரண்டு அரசுகளுடன் போராடி, வெற்றிபெற்றிருக்கிறோம் என்றும் பால்ராஜ் தெரிவித்தார்.

# கடந்த காலத்தில் இந்தியா செய்த தவறை இலங்கை மன்னித்துவிட்டது

## இந்திய வெளிவிவகார முன்னாள் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு - பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு அரங்கில் இடம்பெற்ற இந்திய - இலங்கை உயர்விவகார மாநாட்டில், ஆரம்ப உரை நிகழ்த்திய இந்திய முன்னாள் வெளிவிவகார செயலாளர், இந்தியா - இலங்கைத் தமிழருக்கு இழைத்த அநீதியை ஒத்துக்கொண்டுள்ளதோடு, இலங்கை அரசு அதை மன்னித்துவிட்டதாகவும் கருத்துக் கூறியுள்ளார். திருகோணமலை துறைமுகத்தை இரு நாடுகளும் இணைந்து புனருத்தாரணம் செய்து நிர்வகிக்கவேண்டுமென்று கருத்துக் கூறிய அவர், இலங்கை - இந்திய கடல் எல்லைகளில், இரு நாட்டு கடற்படைகள் மட்டுமே காவலில் ஈடுபடவேண்டுமென்றும், மூன்றாவது கடற்படையொன்றை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கமுடியாது என்றும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களை - விடுதலைப் புலிகளின் கடற்படையே கைதுசெய்து வருவதாகக் குற்றம் சுமத்திய இவர், இந்தியா- விடுதலைப் புலிகளின் இந்தச்செயற்பாடுகளைக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியா கடந்த காலத்தில் பல தவறுகளை இழைத்துள்ளது. குறிப்பாக இந்திய இராணுவம் - இலங்கையில் இருந்த காலத்தில் ஏராளமான பாரிய தவறுகள் நடைபெற்றுள்ளன. எனினும், இத்தவறுகளையெல்லாம் இலங்கை மன்னித்துவிட்டது.

இப்போது இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளும் பயங்கரவாதத்தினால் பாதிப்படைந்துள்ளநிலையில், இனிவரும் காலத்தில் இந்த இரு நாடுகளும் அனைத்து விவகாரங்களிலும் இணைந்து செயற்படவே விரும்புகிறது என்று தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளை இந்தியா கூர்ந்து அவதானித்து வருவதாகக் கூறிய அவர், ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வுகாண இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டியதுடன், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக அலகு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் சாடியுள்ளார். இந்த மாநாட்டில் இந்தியத் தூதுவர் நிருபம் சென், முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும், எம்.பி.யுமான லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட பல அரசியல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.


# படைத்தரப்பு கலந்துரையாடலை அரச அதிகாரிகள் புறக்கணிப்பு

யாழ்.படைத்தரப்பில் நேற்றுமுன்தினம் - ஞானம்ஸ் ஹோட்டலில் நடத்தப்பட்ட கலந்துரையாடலை, யாழ்.மாவட்ட அரச அதிகாரிகள் பலர் நிராகரித்துள்ளனர். இடம்மாற்றம் பெற்றுச் செல்லவுள்ள யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, இந்தக் கலந்துரையாடலில் விசேட அதிதியாகக் கலந்துகொண்டார்.

அரச உயர் அதிகாரிகளின் வரவு குறைவாக இருந்தமையானது, படையதிகாரிகள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா - வழமையான தனது கருத்துக்களையே முன்வைத்தார். அதற்கமைய- உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டால், படையினரின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும் எனவும், தற்போது நீரியல் வள அமைச்சினால் வழங்கப்படும் அடையாள அட்டைகளை யாழ்.மீனவர்கள் பெற்றதும், கடற்தொழிலாளர் எதிர்நோக்கக் கூடிய பாஸ் நடைமுறை மற்றும் தொழில் சார்ந்த பிரச்சினைகள் நீக்கப்படும் எனவும் தெரிவித்தார். அங்கு உரையாற்றிய இராணுவ அதிகாரி ஒருவர் - இன்று அரச அதிகாரிகள் புறக்கணிப்பார்கள் என முன்னமே தெரிந்திருந்தால், தாமும் கலந்துகொள்ளாது விட்டிருப்போம் எனக் குறிப்பிட்டார். (202)

# வடபகுதியின் செய்திகள் எவையும் தெற்கில் முழுமையாக வருவதில்லை

தென்னிலங்கை ஊடகவியலாளர் சங்கத் தலைவரும், "சண்டே ஒப்சேவர்" பத்திரிகை எழுத்தாளருமான டபிள்யூ.ஜே.ரி.எஸ்.கவிரட்ண - கொழும்பில் நடைபெற்ற சமாதானத்திற்கான கலைஞர்கள், எழுத்தாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டபோது, நமது ஈழநாடு பத்திரிகைக்கு அளித்த விசேட செவ்வியை இங்கே தருகின்றோம்.



**கேள்வி:** வடபகுதிக்கு வந்துசென்ற தங்கள் அனுபவம் எவ்வாறானதாக இருக்கிறது?

**பதில்:** கடந்த ஆட்சியின்போது, அதாவது ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு ஆட்சியிலிருந்தபோது, நான் சமாதானம் பற்றிய தொனிப்பொருளிலான ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளேன். இந்தக் கட்டுரைகளில் அநேகமானவை - தென்பகுதி மக்களிடமுள்ள சமாதானம் பற்றிய எண்ண உணர்வுகளை அவர்களுடைய குரலாக எடுத்தியம்புவனவாகவே இருந்தன. மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களது கருத்துக்களை கேட்டு, அவற்றையே பத்திரிகையில் எழுதினேன். அரசியல்ரீதியான தீர்வையே நான் விரும்புகிறேன்.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதிகளில், எம்மால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குச் செல்ல முடியாதநிலை காணப்பட்டது. அதனால், வடபகுதி மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளமுடியாமலிருந்தது. ஆனால், தற்போது நடைமுறையிலுள்ள தற்காலிக யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தவுடன், உடனடியாக நான் யாழ்ப்பாணம் சென்றேன். அங்குள்ள மக்களுடன் உரையாடினேன். அவர்களது எதிர்பார்ப்புக்களையும், அபிலாசைகளையும் புரிந்துகொண்டபின், மீண்டும் கொழும்பு வந்து அவற்றைக் கட்டுரைகளாகப் பத்திரிகைகளில் எழுதினேன். இதுவரை அத்தகைய பத்தொன்பது கட்டுரைகளை எழுதியுள்ளேன்.

போர்நிறுத்தம் உருவான பிற்பாடு வடபகுதி சென்றபோது, எவ்வாறான ஆவணங்களை எடுத்துச் செல்லவேண்டும் என்பது எனக்குத் தெரியாதிருந்தது. இதனால், வவுனியாவில் படையினருடனும், பின் விடுதலைப்புலிகளுடனும், வாக்குவாதப்பட நேர்ந்தது.

போருக்கு முன்னரும், பின்னரும் வடபகுதி மக்களின் நிலைப்பாட்டை அறியவிரும்பினேன். நான் விடுதலைப்புலிகளின் பல உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன். இந்தச் சந்திப்புக்கள் அனைத்தும் ஏ-9 பாதை திறந்த பின்னர்தான் நடைபெற்றது.

வடபகுதியிலுள்ள எல்லா மக்களும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். அவர்களில் எவரும் போரை விரும்புவதாக எனக்குப் படவில்லை. அவர்கள் அனைவரும் அமைதியான வாழ்வையே விரும்புகிறார்கள். சிலர் தெற்கிலிருந்து பிரிந்து, சுயமாக வாழவும் ஆசைப்படுகிறார்கள்.

**கேள்வி:** வடபகுதியில் நீங்கள் எவ்வெவ் இடங்களைச் சென்று பார்த்தீர்கள்?

**பதில்:** நான் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலுமுள்ள பல அகதிமுகாம்களுக்குச் சென்றேன். அங்குள்ள மக்கள்படும் அவலநிலைகளை கண்டேன். போரினாலே மோசமாகச் சேதமடைந்துள்ள ஆலயங்களைச் சென்று பார்த்தேன்.

எல்லாவற்றையும்விட, எனது மனதை மிகவும் உருக்கிய இடங்கள் - பெற்றோரை இழந்த சிறுவர்கள் வாழும் பராமரிப்பு இல்லங்கள்தான். அந்தச் சிறுவர்களின் வேதனையின் ஆழத்தை என்னால் உணரமுடிந்தது. கொடிய போரின் காரணமாக, ஏதுமறியாத அப்பாவிச் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒட்டுமொத்தமாக வடக்கிலுள்ள அனைத்து மக்களுமே போரால் பாதிப்படைந்துள்ளார்கள். அவர்களின் துயரநிலையைத் தெற்கிலே எடுத்துக் சொல்வதுதான் எனது வேலையென எண்ணுகிறேன். போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்குச் சான்றாகப் பல புகைப்படங்களையும் வடக்கிலிருந்து நான் எடுத்து வந்தேன்.

**கேள்வி:** நீங்கள் இதுவரை நான்கு தடவைகள் அடுத்தடுத்து வடபகுதிக்கு வந்துள்ளீர்கள். அதற்கான பிரத்தியேக காரணம் யாது?

**பதில்:** நான் நான்குமுறை வந்ததையிட்டு ஆச்சரியப்படவில்லை. நாளையும் சந்தர்ப்பம் கிடைத்தால் நான் வடபகுதி வரத் தயாராகவுள்ளேன். நான் பல தடவைகள் வடபகுதிக்கு வருவதற்கு விரும்புகிறேன். அப்பொழுதுதான் அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை ஆழமாக அறிந்துகொள்ளமுடியும்.

நான் யாழ்ப்பாண மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எழுதிய கட்டுரையொன்று "தென்னாசிய பத்திரிகையாளர்களுக்கான பரிசை" வென்றுள்ளது. நான் பல தடவைகள் விஜயம்செய்து, அதன்மூலம் பெற்றுக் கொண்ட நிறைய தகவல்களினாலேயே இந்தப் பரிசினை என்னால் பெறமுடிந்தது.

**கேள்வி:** தென்னிலங்கை ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பாகச் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. அது தொடர்பாகத் தங்கள் கருத்து யாது?

**பதில்:** துரதிர்ஷ்டவசமாகத் தென்னிலங்கை பத்திரிகைகளில் சில, உண்மையான செய்திகளை வெளியிடுவதில்லை. இந்தப் பத்திரிகைகள் பெரும்பான்மை சிங்கள மக்களையே சென்றடைகின்றன. எனவே, தவறான செய்திகளால் அவர்கள் பிழையான பாதையிலே வழி நடத்தப்படுகிறார்கள்.

குறிப்பாக "தினமின" பத்திரிகை இனவாதத்தை கக்கும் பத்திரிகையாகவே தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. தென்னிலங்கை பத்திரிகைகளில் பலர் தமது இருக்கைகளைவிட்டு இரண்டு அடி தூரம்கூட நகராது, வடபகுதி பற்றிய செய்திகளை, கட்டுரைகளை எழுதி வருகிறார்கள். அவர்கள் உண்மைநிலை தெரியாதவர்களாகவுள்ளார்கள்.

தென்னிலங்கை பத்திரிகையாளர்கள் பலர் வடக்கிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள். நான் எவரின் துணையுமின்றி தனியாகவே வடபகுதிக்கு வந்துசென்றேன். ஆனால், ஏனைய பத்திரிகையாளர்கள் - குழுவாக வருவதையே விரும்புகிறார்கள்.

அவர்களை வரவேற்று, போரின் பாதிப்புக்களையும், உண்மையான நிலைப்பாட்டையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். அதன் மூலமாகத் தவறான கருத்துக்களைப் பெற்றுள்ள சிங்கள மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படும் என நான் நம்புகிறேன்.

**கேள்வி:** வடபகுதிக்கு வந்து சென்றபின், சமாதானப் பயணத்தில் தங்களின் பங்கு எவ்வாறானதாக உள்ளது?

**பதில்:** வடபகுதியிலிருந்து மீண்டும் தென்னிலங்கை வந்த பின்னர், நான் இருபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை "சண்டே ஒப்சேவர்" பத்திரிகையல் எழுதியுள்ளேன். என்னிடமிருந்த பல பெறுமதியான புகைப்படங்களையும் பத்திரிகைகளில் வெளியிட்டேன். இவற்றின் மூலமாகப் போரின் பாதிப்புக்களைத் தென்னிலங்கை மக்களுக்கு ஓரளவிற்காவது தெரியப்படுத்தியுள்ளேன்.

தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளினால் நான் எனது கட்டுரைகளை ஆங்கிலமொழியிலேயே எழுதவேண்டியுள்ளது. இதனால், எல்லாச் சிங்கள மக்களையும் எனது கருத்து சென்றடையும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது. இதனால், நான் மக்களை குழுக்களாக சந்திக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எனது கருத்துக்களைக் கூறிவருகிறேன்.

சிங்கள மக்களுக்கு - பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீது நிறைந்த அனுதாபம் உண்டு. தமிழ் மக்களின் யதார்த்தநிலைமையை நாம் அவர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். ஒரு தலைப்பட்சமான கருத்துக்களையே பத்திரிகையாளர்கள் எழுதிவருகின்றமை கண்டிக்கப்படவேண்டியது.

**கேள்வி:** தென்னிலங்கை அரசியல் நிலைமைகள் குறித்து தங்கள் கருத்து யாது?

**பதில்:** தற்போதுள்ள சூழ்நிலையில் என்ன நடந்தது என்று கூறமுடியுமேதவிர, என்ன நடைபெறும் என கூறமுடியாதுள்ளது. இன்றுவரை உரிய தலைமைகள் உருவாகாமையினாலேயே இனப்பிரச்சினை வலுப்பெற்றுள்ளது. தற்போதுள்ள அரசு சமாதானத்திற்காகப் பாடுபடும்போது, சில குழப்பங்கள் ஏற்படுவது வேதனைக்குரிய விடயமாகும். சமாதான முயற்சியின் பயனாகப் பல திருப்பங்களையும், வெற்றிகளையும் அடைந்துள்ளபோது, முடக்கமான ஒருநிலை உருவானமை கவலைக்குரியதாகும். ஆனாலும், சமாதான முயற்சிகள் வெற்றிபெறும் என்றே நம்புகிறேன்.

தென்னிலங்கையிலே சமாதானத்திற்கு எதிரான பிரசாரங்கள் வலுவடைந்துள்ளன. ஆனால், வடபகுதியிலே அவ்வாறான எந்தவொரு பிரசாரத்தையும் காணமுடியவில்லை. அங்குள்ள மக்கள் சமாதானத்திற்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகிறார்கள். இது மகிழ்ச்சிக்குரியவிடயமாகும்.

**கேள்வி:** மாவீரர் நாள் நிகழ்வுகளைப் படையினர் குழப்பியமை குறித்து தங்களின் கருத்து யாது?

**பதில்:** நான் வடபகுதிக்கு வந்தபோது, கோப்பாயிலுள்ள மாவீரர் துயிலுமில்லத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு மரணமான போராளிகளுக்கு மகத்தான மரியாதை அளிக்கப்பட்டிருந்தது. இது வரவேற்கவேண்டிய விடயம்.

ஆனால், படையினர் மாவீரர்தின அலங்காரங்களை நாசம் செய்ததாக நீங்கள் கூறுகிறீர்கள். இது தொடர்பான செய்திகள் எவையும் தென்னிலங்கை பத்திரிகைகளில் வரவில்லை. நிலைமை அவ்வாறுதான் உள்ளது.

எந்தவொரு இனத்திற்கும் தனது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கலாசார விழாக்களையும், தனது இனத்திற்காக மடிந்த மாவீரர்களை நினைவு கூருவதற்கும் உரிமையுண்டு. இது அந்த இனத்தின் அடிப்படை மனித உரிமை. இதனைத் தடுக்கமுயல்வது காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

இராணுவ உயரதிகாரிகள் இது தொடர்பாகச் சாதகமான கருத்தைக் கூறியதாகத் தாங்கள் தெரிவிக்கிறீர்கள். அவ்வாறிருந்தும், தொடர்ந்தும் இடையூறுகள் ஏற்பட்டமைக்குக் கீழ்மட்ட படையினரே காரணம். உயர்மட்ட அதிகாரிகளைவிட, சாதாரண போர்வீரர்கள் வித்தியாசமான மனவுணர்வைக் கொண்டுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலோனோர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றே நான் எண்ணுகிறேன்.

**நேர்காணல்: இ.சர்வேஸ்**

# பல்வேறு வழிகளாலும் பாதிப்படையும் வர்த்தகத்துறை மாணவர்கள்

தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு விடயத்தில், வர்த்தகத்துறையை க.பொ.த உயர்தரத்தில் கற்ற மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பலதரப்புக்களிடம் இருந்தும் பொதுவான ஒரு குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டம் பெரிதும் மேலோங்கி இருக்கும் யாழ். மாவட்டத்தில், இளைஞர்கள் எல்லோரிடமும் இது பற்றிய பேச்சுத்தான் தற்போது அடிபட்டுக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில், வர்த்தகத்துறை மாணவர்கள் இந்தத் தெரிவுகளில் பாதிக்கப்பட்டுள்ளதாக எழும் குற்றச்சாட்டிலும், நியாயம் இல்லாதில்லை. பல்கலைக்கழக அனுமதிகள் எனும் விடயத்தைக் கருதும்போதும், மிகக் குறைந்தளவான வர்த்தகத்துறை மாணவர்களே பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பெறும் வாய்ப்புக்காகத் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

யாழ். மாவட்டத்தை உதாரணமாக கொண்டு பார்த்தால், இந்தத் துறைக்கு 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அதனைவிட, கலைத்துறைப் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் ஆகியவற்றை உயர்தரத்தில் ஒரு பாடமாகக்கொண்டு பயிலும் மாணவர்கள் - நுண்கலைப்பீடத்திற்கும் தெரிவாவதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளன.

அத்துடன், நாடகமும் அரங்கியலும், இந்து நாகரிகம் எனப் பல்வேறு பாடங்களிலும் விசேடமாக மேலதிக மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இந்த வகையில் கலைத்துறை மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஏதோவொரு வகையிலே உயர்கல்வி பெறும்வாய்ப்பு பெறுகின்றனர்.

ஆனால், வர்த்தகத்துறை மாணவர்களைப் பொறுத்தவரையிலே முகாமைத்துவம், வணிகத்துறை எனும் இரு துறைகளுக்குமாக நூற்றிலும் குறைந்த மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால், ஏராளமான வர்த்தகத்துறை மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றும், பல்கலைக்கழகம் செல்லமுடியாதநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அடுத்த விடயமாக, கல்வியியல் கல்லூரிக்கான அனுமதி தொடர்பாகக் கருதும்போது, கலைத்துறை மாணவர்களால் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பிக்கமுடிகிறது. ஆனால், வர்த்தகத்துறை மாணவர்கள் சமூகக்கல்வி பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க கூடியதாகவுள்ளது. இந்தப் பாடநெறியும்கூட, யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியிலே போதிக்கப்படாது, மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியிலேயே போதிக்கப்படுகிறது.

எனவே, வெளிமாவட்ட கல்வியியல் கல்லூரி ஒன்றிற்கான தெரிவாக இது அமைவதால், யாழ். மாவட்டத்திலிருந்து மிகக்குறைவான மாணவர்களே இந்தத் துறைகளுக்கும் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த வகையில் பார்த்தால், கல்வியியல் கல்லூரி அனுமதிகளிலும் வர்த்தகத்துறை மாணவர்கள் பாதிக்கப்படுவது புலனாகின்றது.

உயர்தரப் பெறுபேறுகளின்மூலம், இலவசமாக உயர்தரகல்வியைப் பெறமுடியாத மாணவர்கள் - பணத்தைச் செலுத்தி கற்கைநெறிகளைக் கற்கச்செல்வது வழமையான விடயம். அந்த வகையில் வர்த்தகத்துறை மாணவர்கள் வெளிவாரியாக வணிகமாணி பட்டத்தைப் பெறமுடியும்.

அல்லது போனால் ஏ.ஏ.ரி (AAT), சி.ஐ.எம்.ஏ (CIMA) போன்ற கணக்கியல்துறைகளை கற்கமுடியும். இந்தத் துறைகள் அனைத்துமே மிகுந்த பணச்செலவைச் ஏற்படுத்தக்கூடிய துறைகளாகும். இதனால், ஏழை மாணவர்கள் இந்தத் துறைகளையும் கற்கக்கூடிய வாய்ப்பையும் பெறமுடியாமல் போகின்றது.

எனவே, பல்வேறு வழிகளிலும் வர்த்தகத்துறை மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். இந்த நிலையில், தமிழ்மொழிமூலம் ஆசிரியர் ஆட்சேர்ப்பு விடயத்தில் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து, இந்தத் துறை சார்ந்த மாணவர்கள் பலரும் அதிருப்தியும், விசனமும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் - உரிய நடவடிக்கைகளை உடனே எடுத்து உதவவேண்டுமென இந்தத் துறை மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள். குறைந்தபட்சம் ஆரம்பக்கல்விக்காவது வர்த்தகத்துறை மாணவர்களும் விண்ணப்பிக்கக்கூடிய வசதிகள் செய்துதரப்படவேண்டும் என்பதே இவர்களது வேண்டுகோள் ஆகும்.

கல்வி கற்றுவிட்டுப் பல ஆண்டுகளாக வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைய சமூகத்தினர் ஒவ்வொருவரதும் உணர்வலைகள் சொல்லில் விளக்கமுடியாதவை. வாழ் செலவுகள் அதிகரித்துக்கொண்டுபோகும் இந்த சூழ்நிலையில், வேலைவாய்ப்பை தேடியே எமது சமூகத்தின் காலங்கள் கழிந்துகொண்டு போகின்றது.

எனவே, இவ்வாறு காலத்திற்குகாலம் பல்வேறு வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டாலும், அரசியல்வாதிகளின் தலையீடுகள் ஒருபுறம் இருக்க இவ்வாறான பாரபட்சமான நடவடிக்கைகளினாலும் எமது சமூகம் பாதிப்படைவது கவலைக்குரியவிடயமாகும்.

தமிழர் ஆசிரியர்கள் சங்கம், அதிபர்கள் சங்கம், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் இன்னோரன்ன தரப்பினர் இவ்விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துவதன் மூலம்தான் - போரினாலும், பொருளாதாரத்தினாலும் பாதிப்புற்ற எமது மாணவ சமூகத்திற்கு பயன் பெற்றுக்கொடுக்கமுடியும்.

**இ.சுதந்திரன்**

**USA Green Card Lottery**

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்துவாழ Green Card Lotto வில் பங்குபற்ற விண்ணப்பித்துத் தரப்படும். அத்துடன், நீங்கள் விண்ணப்பித்ததற்கான உரிய மூல ஆவணமும் வழங்கப்படும்.

♦ U.K. (லண்டன்) விசா விண்ணப்பப் படிவத்தினையும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அழையுங்கள் S.பிரதீபன் தொ.பே- 0776 153874 யாழ்ப்பாணம். (538)

## ஆயுதபாணி தாக்குதல் கொலம்பியாவில் 13 பொதுமக்கள் பலி

கொலம்பியாவில் ஆயுதபாணி ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் 13 கொலம்பிய பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கொலம்பியத் தலைநகரான பொகோட்டாவிலிருந்து நூறுமைல்களுக்கு அப்பாலுள்ள பாபாகோஸ் என்னும் இடத்தில் நேற்று மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

**ராஜா** யாழ்ப்பாணம்.

8 ஆம் திகதி வரை

சிலம்பரசன், ஷர்மி நடித்த

**காதல் அழிவதில்லை**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, (பு.நே)

**2 FAST 2 FURIOUS**

இரவு 9.30 மட்டும்

9 ஆம் திகதி முதல்

**எனக்கு 20 உனக்கு 18**

(சி-1847)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜய், ஜோதிகா நடித்த

**திருமலை**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

**CATCH ME IF YOU CAN**

(சி-1846)

# ரஷ்ய ரயிலில் குண்டுவெழிப்பு 36 பயணிகள் பலி; பலர் காயம்!



தெற்கு ரஷ்யாவில் பயணிகள் ரயில் வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் 36 பயணிகள் உயிரிழந்ததுடன், பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

நேற்று ரஷ்யாவின் தலைநகரிலிருந்து பயணிகளை ஏற்றிச்சென்றுகொண்டிருந்தவேளை மின்றலைன்வோடி, இஸ்லோவோட்ஸ் ஆகிய இடங்களுக்கிடையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. இதன்போது ரயில், பாதையை விட்டு தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரயில் மீது தற்கொலைத்தாக்குதலே மேற்கொள்ளப்பட்டதாக ரஷ்யாவின் உட்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இதனை உள்ளகப் பாதுகாப்புப் பிரிவினரும் உறுதிசெய்துள்ளனர்.

ரஷ்யாவின் அவசரகால அமைச்சு இது தொடர்பாகத் தெரிவிக்கையில், இந்தத் தாக்குதலில் ரயில் வண்டியின் இரண்டாவது பெட்டி பாரிய சேதமடைந்ததாகவும், இது பயங்கரவாதிகளின் நடவடிக்கை எனவும் தெரிவித்தது.

சம்பவம் நடந்த இடத்தில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், ஏனையோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்ததாகவும் .தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் அதிகாரிகள் இது குறித்துத் தெரிவிக்கையில், தாக்குதல் நடந்தவுடன் ரயிலில் இருந்தவர்கள் ஒரு பக்கமாகத் தூக்கிவீசப்பட்டனர் எனத் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை எனத் தெரியவருகிறது.

## இன்னும் இரண்டு நாட்களில் வைகோ விடுதலையாவார்!

### அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் தெரிவிப்பு

பொடா சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ இன்னும் இரண்டு நாட்களில் விடுதலை செய்யப்படுவார் என்று, இந்திய மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், பொடா மறு ஆய்வுக்குழு, வைகோ வழக்கை வேகமாக ஆய்வுசெய்துவருகிறது. எனவே, இரண்டு நாட்களுக்குள் அவர் விடுவிக்கப்பட்டுவிடுவார்.

இந்த நிலையில், வைகோ கைது குறித்து கடந்த இருநாட்களாகத் தீவிரமாக ஆய்வுசெய்த பொடா மறு ஆய்வுக்குழு முடிவுஎதையும் நேற்று அறிவிக்கவில்லை.

## ஈராக்கில் குண்டுத் தாக்குதல்; மூவர் பலி; பலர் படுகாயமடைந்தனர்

ஈராக்கின் மொசூட் நகரத்திற்கு அருகில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் இரண்டு ஈராக்கியர்கள், அமெரிக்கப்படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று நடந்த இந்தத் தாக்குதல் தொடர்பாக, நேரில் கண்டவர்கள் தெரிவிக்கையில் பாதையோரமாக நடத்தப்பட்ட இந்த தாக்குதல் அமெரிக்கப் படையினரின் தொடரணி மீதே மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்தத் தாக்குதலின் இடையில் சிக்கியே இரு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் ஒரு அமெரிக்கப் படைவீரர் கொல்லப்பட்ட செய்தி தொடர்பாக அமெரிக்கத் தரப்பிலிருந்து எந்தத் தகவலும் இதுவரை வெளியிடப்படவில்லை.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை நண்பன்

**தம்பிராசா சுதர்சன்**

**(சுதா)**

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை நண்பர்கள்

ஏ.சச்சிதானந்தன்

நெடுந்தீவு (சி-1870) ந.தர்மகுமார்

## கண்ணீர்க் காணிக்கைகள்

எமது நிலைய ஆரம்பகால உறுப்பினர்

**தம்பிராசா சுதர்சன்**

(ஆசிரியர்)

அவர்கள் 04.12.2003 அன்று திடீர் மரணமெய்தியமையையிட்டு, அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஐக்கியதீப சனசமூக நிலையம்

(சி-1869) நெடுந்தீவு

**காஸ்குக்கர் (GAS COOKER) பாவனையாளர்களுக்கு ஒரு நற்செய்தி**

✠ உங்கள் காஸ்குக்கர் பழுதடைந்துள்ளதா?

✠ துருப்பிடித்து பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதா?

பழுதடைந்த உதிரிப்பாகங்களுக்குப் பதிலாக புதிய உதிரிப்பாகங்கள் இடப்பட்டு கறள், துருப்பிடித்த பகுதிகள் முற்றாக நீக்கப்பட்டு உரிய வர்ணம் தீட்டி எவர்சில்வர் பகுதிகள் பொலிஷ் செய்துதரப்படும்.

✠ ஹோட்டல்களில் உபயோகிக்கப்படும் பாரிய காஸ்குக்கர் (HEAVY DUTY) நேர்த்தியான முறையில் சேவிஸ் செய்து திருத்தப்பட்டு 24 மணி நேரத்தில் மீண்டும் பாவனைக்குத் தரப்படும்.

**REPAIR, SERVICE & CALIBRATION**

☞ தொடர்புகட்கு

க.கருணாநிதி

கனகசபாபதி ஒழுங்கை,

(நாகபூசணி அம்மன் கோவில் அருகாமை)

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (சி-1865)

## உளமார்ந்த நன்றிகள்




வெள்ளாம் போக்கட்டி சனசமூக நிலைய சுற்றாடல் மக்களுக்கு மலசலகூட வசதிக்காக 70 குடும்பங்களுக்கு (700 பக்கற்) சிமெந்து தந்துதவியும், வெள்ளாம் போக்கட்டி கொடிகாமம் வீதியில் 1/2 கி.மீற்றருக்கு மின்வசதி ஏற்படுத்தித்தர உறுதிவழங்கிய எமது இந்து சமய விவகார அமைச்சர் உயர் திரு தி.மகேஸ்வரன் அவர்களுக்கு சனசமூக நிலைய நிர்வாகிகள், பொதுமக்கள் சார்பாக எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வெள்ளாம் போக்கட்டி கொடிகாமம்**

**சனசமூக நிலைய நிர்வாகிகள், கிராம அபிவிருத்திச்சங்கம், பொதுமக்கள்.**

(545)

## 9ஆவது ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 27 |  | 17 |
| 11 | | 11 |
| 1949 | | 1994 |

## அமரர். சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர், கனகா பத்திரிகை அகம் - திருநெல்வேலி)

**திதி: 06.12.2003**

நீங்கள் பிரிந்து ஒன்பது ஆண்டுகள் ஆனாலும்
தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது

| நிரந்தர முகவரி: | தற்போதைய முகவரி: | உங்கள் பிரிவால் துன்புறும் |
|---|---|---|
| கனக இல்லம், | இல.37, பலாலி வீதி, | மனைவி, மக்கள், |
| கைதடி கிழக்கு, | திருநெல்வேலி. | உற்றார், உறவினர்கள். |
| கைதடி | | |

(சி-1866)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## மடத்தடி விபத்துச்சம்பவம்;
# இராணுவ பொறுப்பதிகாரிக்கு எதிராக பொலிஸாரால் குற்றப்பத்திரம் தாக்கல்!

மடத்தடி வீதி விபத்துச்சம்பவம் தொடர்பாக படைவாகன சாரதிக்கும் இராணுவ வாகன பிரிவு பொறுப்பதிகாரிக்கும் எதிராக, யாழ். பொலிஸ் நிலைய பொலிசார் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளனர். நேற்று நடைபெற்ற விசாரனையின் போது இந்தக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த இருமாதங்களுக்கு முன்னர் - குருநகர் மடத்தடி வீதிப்பகுதியில் நடைபெற்ற இராணுவ வாகன விபத்து ஒன்றில் இரு இளைஞர்கள் பலியானது தெரிந்தவிடயம்.

இந்த விடயம் தொடர்புடைய இராணுவ வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு எதிராக இருவர் உயிரிழக்க காரணமாக இருந்தமை, கவலையீனமதாக வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் விபத்தை தடுக்க முயலாமை ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

தடுப்பு (பிறேக்) இல்லாத வாகனத்தை இராணுவ பாவனைக்காக வழங்கியமைக்கு எதிராக இராணுவ வாகன பிரிவு அதிகாரிக்கு, எதிராகவும் பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி.நந்தசேகரம் வழக்கு விசாரணைகளை அடுத்த வருடம் ஜனவரி 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ச)

### கிண்ணியா மக்களுக்கு ஆதரவாக சிஹல உறுமய ஆர்ப்பாட்டம்

கிண்ணியாவில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளுக்கு ஆதரவு தெரிவித்து - சிஹல உறுமய நேற்று சமாதானப்பாதயாத்திரை ஒன்றை நடாத்தியுள்ளது.

கடந்த சில தினங்களாக திருகோணமலை கிண்ணியாப்பகுதியில் நடைபெற்றுவரும் மோதல் சம்பவங்களால், பதற்றநிலையை அடுத்தே அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து தாம் இதனை மேற்கொள்வதாக சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை சூரன்கல்லில் ஆரம்பமான பாதயாத்திரை முஸ்லிம் மக்கள் தங்கியிருந்த பகுதிகளுக்கு சென்று, உணவுப் பொருட்களை அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

### நாற்சந்தி

'இலங்கையில் தற்போது நடைபெறும் நிகழ்வுகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது

'இலங்கையின் இறைமையிலும் இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளது...'

'அரசின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு புலிகள் அளித்துள்ள பதில் நியாயமானதல்ல...'

இதெல்லாம் முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சின் முன்னாள் செயலர் ராஜ் கோத்ரா என்பவரின் கருத்துக்கள்.

இதனைக் கொழும்பில் ஒரு கருத்தரங்கில் அவர் கூறியுள்ளார்.

'விடுதலைப் புலிகள் கடலில் மேற்கொள்ளும் பயிற்சிகள் சட்டரீதியற்றதாம். அதனை இந்தியா ஒரு போதும் அனுமதிக்காதாம்'

இதையும் அவர்தான் கூறியுள்ளார்.

'இந்தியா மீண்டும் இலங்கைப் பிரச்சினையில் நுழையத் தருணம் பார்க்கிறதா?'

- இது மணியத்தாரின் சந்தேகம்.

முன்னர் ஜே.ஆர். அழைத்து வந்த இந்திய அமைதிப்படையுடன் வந்து தமிழர்கள் வாழும் பகுதிகளில் அழிப்பு வேலைகளைச் செய்துவிட்டு பிரேமதாசா கெற்அவுட் என்று மட்டும் சொல்லாத நிலையில் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறியது .

இப்போது யார் அழைத்து வரப்போகிறார்கள்... ஜனாதிபதியும் அவரது ஆட்களுமா?

இதே ஜே.வி.பி.தானே அப்போது இந்தியப் படைக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவை வழங்கியதுதானே...!

'இப்போது காலம் மாற கோலமும் மாறுகிறதா?'

'முன்பு தமிழ்மக்களை இரட்சிப்பதாகக் கூறிக்கொண்டு வந்த இந்தியா இப்போது சிறிலங்காவின் இறைமையைப் பாதுகாக்க வருகிறதா...?'

'முன்பு அழிந்தது தமிழ்மக்களும் மண்ணும்... இனிமேல்...?'

கனகரின் கேள்வி, மணியத்தாரைச் சிந்திக்க மட்டுமல்ல சிரிக்கவும் வைத்தது.

-தெருவாசி

# கல்வியியல் கல்லூரி அனுமதியில் முறைகேடு மனித உரிமைகள் அலுவலகத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரத்தில் சித்திர பாடத்தில் சித்தியடைந்திருந்தும் கல்வியியல் கல்லூரிக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, கடந்த 2001/2002 ஆம் ஆண்டுக்கான கல்வியியல் கல்லூரிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது, க.பொ.த. சாதாரண தரத்தில் சித்திர பாடத்தில் அதிவிசேட சித்தியையோ அல்லது க.பொ.த உயர்தரத்தில் சித்திர பாடத்தில் சித்தியையோ பெற்றவர்கள் கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வர்த்தமானி அறிவித்தலின்படி, க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், க.பொ.த.உயர்தரத்தில் சித்திரத்தில் சித்திபெறாத, க.பொ.த.உயர்தரத்தில் சித்திரப் பாடத்தை ஒரு பாடமாக எடுக்காத பலருக்கு க.பொ.த.சாதாரண தரத்தை மட்டும் கருத்தில் கொண்டு கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது அடிப்படை மனித உரிமைமீறும் செயலாக உள்ளதால் இதற்கான சரியான பதிலைப் பெற்றுத்தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினரை கேட்டுக்கொள்வதாகவும் இந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை பரீட்சை ஆணையாளருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. (ப)

### கொமன் வெல்த்...

துடன் கதிர்காமர் நல்ல நண்பரும் கூட. எனவே இதுதொடர்பில் நாம் உறுதியான முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொமன்வெல்த் செயலாளர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமர் போட்டியிட இந்தியா தனது ஆதரவை வழங்கவேண்டுமென, இலங்கை முன்னர் கேட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி...

பிரதமருக்கும் இடையில் மூன்று சந்திப்புக்களை ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற மூன்றாவது சந்திப்பின் போது, தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நடைபெறும் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும் இந்த கலந்துரையாடலின்போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதெனவும், இது தொடர்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி மீண்டும் சந்தித்துக் கலந்துரையாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் எனவும், அவ்வாறு இணக்கப்பாட்டுக்கு வரமுடியாதுவிடின், தேசிய மறுசீரமைப்பு மற்றும் நல்லிணக்க கூட்டு அரசாங்க யோசனையை விட, கீழ் மட்டத்திலான தீர்வு ஒன்றை எடுக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அவ்வாறான உடன்பாடு எட்டப்படும் அல்லது எட்டப்படாது என்ற ஒரு இறுதியானநிலை ஏற்படும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி தம்வசப்படுத்தியதை அடுத்து, நாட்டில் அரசியல் நெருக்கடிநிலை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# அரசாங்க ஊழியர்களின் சம்பளம் இம்மாதம் 19 ஆம் திகதி வழங்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான டிசம்பர் மாத சம்பளத்தினை இம்மாதம் 19ம் திகதி வழங்குமாறு திறைசேரி அறிவித்துள்ளது.

எதிர்வரும் 25ம் திகதி நடைபெறவுள்ள கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு இந்தமாதச் சம்பளத்தை முன்னர் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் சகல அமைச்சுக்களுக்கும், திணைக்கள அமைச்சினதும் செயலாளருக்கும் இநத அறிவுறுத்தல் அடங்கிய சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறான அரச ஊழியர்களுக்கான இந்தமாத கொடுப்பனவு 24 ஆம் திகதி வழங்குமாறு, முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## லெப்.கேணல் மதியின் 15 ஆவது ஆண்டு நினைவு தினம்

10.12.2003

மேற்படி தினத்தை முன்னிட்டு பின்வரும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

1. மரதன் ஓட்டப்போட்டி.
2. வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்கள் முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி.

பங்குபற்ற விரும்புவோர் 08.12.2003 க்கு முன்னர் சுன்னாகம், கந்தரோடை வலிகாமம் கோட்ட அரசியல்துறை அலுவலகத்திலும், அளவெட்டி அரசியல்துறை தெல்லிப்பளை கோட்ட அலுவலகத்திலும் பதிவு செய்து கொள்ளலாம்.

தகவல்
அமைப்புக்குழு,
தெல்லிப்பளை பிரதேச அரசியல்துறை,
அளவெட்டி.

# எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி இன்று!

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக தமீழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப்போட்டிகளின் முதலாம் சுற்று கால்இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி அரையிறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்படும்

இந்தப் போட்டிகளின் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் மின்னொளியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தாச்சிப்போட்டியொன்றும் இன்று நடைபெறவுள்ளதாக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்



ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்

### கண்ணிவெடி...

மீண்டும் இங்கு வந்து பணியைத் தொடரவுள்ளோம் எனத்தெரிவித்தார்.

இவர்களது கண்ணிவெடியகற்றும் பணி தற்போது வவுனியா சாளம்பைக்குளத்தில் நடைபெற்று வருகின்றது.

முப்பது பேர் அடங்கிய இந்தக் குழுவில் செப்டெம்பர் 30 முதல் நவம்பர் 10 வரை 44 கண்ணிவெடிகளும், 48 வெடிக்காத வெடிபொருட்களும் மீட்கப்பட்டன.நவம்பர் 5 முதல் 30 வரை ஒன்பது வெடிபொருட்களே மீட்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (03)

### ஜனாதிபதி ஜே.வி.பி...

பட்டது என்பதற்கான காரணம் உறுதியாகத் தெரியவரவில்லை. இருந்தும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்றுமாலை சந்திப்பு நடந்ததால்தான் இந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கலாம் என தெரிவித்தது.

இதேவேளை - சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கூட்டணி அமைப்பது தொடர்பாக இதுவரை பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளபோதும் இதுவரை அவை எதுவும் வெற்றிபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1570 திகதி: 05.12.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| G | 8 | 9 | 4 | 2 | 0 | 2 |

## அலுவலக சிற்றூழியர்கள் தேவை

எமது அலுவலகத்தில் கடமையாற்றுவதற்கு அலுவலக சிற்றூழியர்கள் தேவை. ஆண்கள் மட்டும் நாளை எமது அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

குறிப்பு:- மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நமது ஈழநாடு,
இல: 267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.